Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 53/2016**

**2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 9 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.செல்வக்குமார் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 9 | தொழில் | - | சார்வு ஆய்வாளர் |
| பெயர் | - | செந்தில்வேல் பெருமாள் | வட்டம் | - | திருச்சங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் |
| த/பெ | - | வள்ளிநாயகம் | சமயம் | - | |
| கிராமம் | - | பள்ளிபாளையம் காவல்நிலையம் | வயது | - | 45/2025 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 29-01-2025 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | - நீதிமன்ற காணொலி அறை. வால்பாறை |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், வால்பாறை |
| இந்த வழக்கில் வழக்கறிஞர்கள் | அரசுக்காக — |
| | எதிரிக்காக வழக்கறிஞர் திரு.S.M.சிவசுப்பிரமணியம், B.A., B.L., |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE PONIT)** | |
| இடம் ( Venue) | முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாமக்கல். |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | கௌசல்யா (Assistant programer) |
| சாட்சி ( Witness) | செந்தில்வேல் பெருமாள் அ.சா.9 |

சாட்சி முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாமக்கல், நீதிமன்ற காணொலி அறைக்கு வரவழைக்கப்பட்டு நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறது.

**(எதிரி ஆஜரில்லை) ( எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழானமனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**(E-Crlmp No. 52/2024 எதிரி தரப்பில் தாக்கல் செய்த குவிமுச பிரிவு 311-ன் கீழான மனுவில் 15-12-2023-ம் தேதிய உத்தரவு படி சாட்சி மீண்டும் அழைத்து அரசு தரப்பில் Crlmp No. 2118/2024-ல் சாட்சியை காணொலி மூலம் விசாரிக்க அனுமதி கோரி தாக்கல் செய்த மனுவில் 19-12-2024-ம் தேதி அனுமதிக்கப்பட்டு சாட்சி காணொலி மூலம் விசாரிக்கப்பட்டார்.)**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எந்த தேதியில் எத்தனைமணிக்கு யார் யார் வந்து புகார் கொடுத்தார்கள் என்றால் 26-08-2016-ம் தேதி 19.00 மணிக்கு வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்று அரசு மருத்துமனை சென்று புகார்தாரர் ஜீவிதாதேவியிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து 20.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

2. நான் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 19.05 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். வால்பாறை காவல் நிலையத்திலிருந்து அரசு மருத்துவமனை சுமார் 200 மீட்டர் துாரத்தில் இருப்பதால் 5 நமிடத்தில் நான் அங்கு சென்றுவிட்டேன்.

3. புகார்தாரர் ஜீவிதாதேவியை அக்காமலையில் இருந்து அரசு மருத்துவமனைக்கு யார்அழைத்து வந்தது என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் ஜான்சன் என்பவர் அழைத்து வந்ததாக விசாரணையில் தெரிந்தது எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்று விசாரித்தேனா என்றால் இல்லை.

4. எதிரியும் புகார்தாரரும் எங்கு குடியிருந்தார்கள் என்று விசாரித்த தெரிந்துகொண்டேனா என்றால் விசாரணையில் புகார்தாரரும் எதிரியும் கருமலையில் குடியிருந்ததாகவும் குடும்ப பிரச்சனை காரணமாக புகார்தாரர் அக்காமலையிலிருந்து இருப்பதாகவும் கூறினார்.

5. சம்பவ தினத்தன்று எதிரி கருமலையில் இல்லை கோயம்புத்துாரில் வேலைக்கு சென்றிருந்தார் என்றால் சரியல்ல. ஜான்சன் என்பவர் வீடும் புகார்தாரர் வீடும் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் புகார்தாரர் வீட்டிற்கும், ஜான்சன் வீட்டிற்கும் இடையில் சுமார் 5 வீடுகள் இருக்கும். 60டு70 அடி துாரம் இருக்கும்.

6. புகார்தாரர் ஜான்சன் வீட்டிற்கு சம்பவதிற்கு பின்பு எத்தனை மணிக்கு சென்றார் எவ்வளவு நேரம் ஜான்சன் வீட்டில் இருந்தார் என்று விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் சம்பவம் 15.00 மணிக்கு நடந்தது. 05டு 10 நிமிடங்களில் ஜான்சன் வீட்டிற்கு புகார்தாரரை அழைத்து சென்றுள்ளார். ஜான்சன் வீட்டில் 1/2 மணி நேரம் இருந்ததாக தெரியவந்தது.

7.ஜான்சன் வீட்டில் புகார்தாரர் இருந்துவிட்டு எத்தனை மணிக்கு மீண்டும் புகார்தாரர் அவரது வீட்டிற்கு சென்றார் என்றால் நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஜான்சன் வீட்டில் 1/2 மணிநேரம் இருந்துவிட்டு வீட்டுக்கு சென்றதாக புகார்தாரர் சொல்லியுள்ளார்.

8. சம்பவயிடத்திற்கு விசாரணைசெய்ய என்னுடன் யார் யார் வந்தது எந்த வாகனத்தில் சென்றோம் அதன் பதிவு எண் என்ன என்றால் நான் மட்டும் தான் சம்பவயிடம் சென்றேன். என்னுடைய இரு சக்கரவாகனத்தில் சம்பவயிடம் சென்றேன். 7 வருடங்கள் ஆனதால் தற்போது பதிவு எண் ஞாபகம் இல்லை.

9. நான் சொன்னது போல சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவயிடம் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.